


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | அக்டோபர் 25, 2018 | புரட்சி 17 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00


# பா.ஜ.க. ஆட்சியில் சட்ட வரம்புகளை மீறும் ஆளுநர்கள்

நக்கீரன் எழுதிய கட்டுரைக்காக தமிழக ஆளுநர்மாளிகை, ‘நக்கீரன்’ ஆசிரியர் கோபால் மீது காவல்துறையில் நேரடியாக புகார் தந்ததோடு இந்திய தண்டனைச் சட்டம் 124அய் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தியது. 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கும் இந்த சட்டத்தில் பிணை கிடைக்காமல் தடுப்பதற்கும் பிடிவாரண்ட் இன்றி கைது செய்வதற்கும், ஆளுநர் இந்தக் கொடூர சட்டத்தைக் கையில் எடுத்தார். எழும்பூர் மாஜிஸ்திரேட் இந்தச் சட்டம் வழக்குக்குப் பொருந்தாது என்று கூறி சிறையிலடைக்க மறுத்து விட்டார். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு அவர்களால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் பலரும் சட்ட வரம்புகளை மீறுபவர்களாகவே இருக்கிறார்கள்.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு அக்கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்களில் தங்கள் கட்சி விசுவாசிகளை ஆளுநர்களாக நியமித்து ஆளுநர் அதிகாரத்தை அரசியல் நலனுக்கேற்ப முறைகேடாகவே பயன்படுத்துவதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. கருநாடகாவில் மெஜாரிட்டி பலம் இல்லாத எடியூரப்பாவை ஆட்சி அமைக்க அழைத்து முதலமைச்சராக பதவி உறுதிமொழியும் ஏற்க வைத்து அவர் மெஜாரிட்டியை நிரூபிக்க முடியாமல் ஓட்டெடுப்புக்கு முன்பே பதவி விலகி ஓடினார்.

மோடி ஆட்சிக்கு வந்த உடனேயே 2015ஆம் ஆண்டு அருணாசலப் பிரதேசத்தில் அரசியல் சித்து விளையாட்டைத் தொடங்கினார்கள். அங்கே ஆளுநராக வந்த ஜெ.பி. ராஜ்கோல்வா சட்டமன்ற கூட்டத் தொடர் நடக்கும் தேதியை அவரே முன்கூட்டியே அறிவித்து சட்டசபையைக் கூட்டச் செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் ஆட்சியை மெஜாரிட்டி இல்லை என்று டிஸ்மிஸ் செய்தார். காங்கிரசிலிருந்து அதிருப்தியாளர்களை இழுத்து ஒரு பொம்மை ஆட்சியை ஆளுநர் உருவாக்கினார்.

உச்சநீதிமன்றம் தலையிட்டு ஆளுநர் முடிவை நீக்கம் செய்தது. “ஒரு ஆளுநர் தனது சொந்த விருப்பத்துக்காக சட்டமன்றத்தைக் கூட்டுவது, ஆளுநரின் வேலையல்ல. சட்டமன்ற செயல்பாடுகளில் குறுக்கிடுவதாகும்” என்று கூறியது

**உச்சநீதிமன்றம் ஆளுநர்களின் அடாவடிகளை கண்டித்தே வருகிறது.**

உச்சநீதிமன்ற அமர்வு. தொடர்ந்து உத்தரகாண்ட் மாநிலத்திலும் இந்த ஜனநாயக விரோத மீறல்களை அம்மாநில ஆளுநர் அரங்கேற்றியபோது உச்சநீதிமன்றம் தலையிட்டு தவறைத் திருத்தியது. ஹரிஷ்ராவத் தலைமையில் நடந்த காங்கிரஸ் ஆட்சிக்கு எதிராக 69 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் போர்க்கொடி உயர்த்தியதால் மாநில ஆளுநர் கே.கே. பவுல் - ஆட்சியை ‘டிஸ்மிஸ்’ செய்தார். சட்டமன்றத்துக்குள் ஆட்சியின் மெஜாரிட்டி எண்ணிக்கையை நிரூபிக்க வாய்ப்பு தராமல் ஆட்சியை கலைத்தது தவறு என்றது உச்சநீதிமன்றம். 2017 ஆம் ஆண்டு கோவா, மணிப்பூர் மாநிலங்களிலும் ஆளுநர் பா.ஜ.க.வின் ஏஜெண்டு களாக மாறி காங்கிரஸ் தனிப் பெரும்பான்மை கட்சியாக தேர்தலில் வெற்றி பெற்றிருந்தாலும் பா.ஜ.க. தலைமையிலான ஆட்சியை நிறுவிட தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தினர்.

2017இல் பீகாரிலும் இதுதான் நடந்தது. ஆளுநராக இருந்த ஆர்.எஸ்.எஸ்.காரரான கேசரிநாத் திரிபாதி, தனிப்பெரும்பான்மை கொண்டிருந்த கட்சியை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. அய்க்கிய ஜனதாதளத்தின் தலைவராக இருந்த நித்திஷ்குமார், லல்லு பிரசாத்தின் இராஷ்டிரிய ஜனதா தளத்துடன் கூட்டணி வைத்து ஆட்சி நடத்தினார். திடீரென்று லல்லு கட்சியின் உறவைத் துண்டித்துக் கொண்டு பா.ஜ.க.வுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க முன் வந்தபோது ஆளுநர் அரசியல் கட்சிக்காரர் போலவே செயல்பட்டார். ஆளுநர்கள் தங்களின் ‘கைப்பாவையாக’ செயல்படக்கூடியவர் களாக இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக மோடி பிரதமரானவுடன் நான்கு ஆளுநர்கள் பதவி விலக நிர்ப்பந்திக்கப்பட்டனர். எம்.கே. நாராயணன் (மே. வங்கம்), அஷ்வனிகுமார் (நாகாலாந்து), பி.எல். ஜோஷி (உ.பி.). சேகர் தத்தா (சத்திஸ்கர்) ஆகியோர் அந்த ஆளுநர்கள். குஜராத் ஆளுநர் கம்லா பெனிவார் - அங்கிருந்து மிசோராம் மாநிலத்துக்கு தூக்கி யடிக்கப்பட்டு, பிறகு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

புதுச்சேரி மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட் டிருக்கும் கிரண்பேடி, டெல்லி மாநிலத்துக்கான தேர்தலில் பா.ஜ.க.வின் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு படுதோல்வியை சந்தித்தவர். இப்போது புதுச்சேரியின் ‘நியமன முதல்வராக’ செயல்பட்டு வருகிறார். ஆட்சியின் அன்றாடப் பணிகளில் குறுக்கிட்டு, அதிகாரிகளுக்கு நேரடியாக உத்தரவு போடுவதும் அதிகாரிகளை அழைத்து ஆய்வுக் கூட்டங்களை நடத்துவதும் அவரது வாடிக்கையாகிவிட்டது. இது ஆளுநரின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டது என்று மாநில முதல்வர் நாராயணசாமி பிரதமருக்கு கடிதம் எழுதியும் முதல்வர் கடிதத்தைக் குப்பைக் கூடையில் வீசி விட்டார் மோடி. கடந்த மே 8, 2018 அன்று புதுவை முதலமைச்சர் அரசு ஆணை ஒன்றை பிறப் பித்தார். ஆளுநர்அல்லது ஆளுநர் அலுவலகம் வழியாக அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சரோடு கலந்து பேசி அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகே செயல்படுத்த வேண்டும் என்று அந்த ஆணை கூறுகிறது.

இப்போது டில்லி யூனியன் பிரதேச வழக்கில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு புதுவை முதல்வர் நாராயணசாமி, கிரண்பேடிக்கு எழுதிய கடிதம் கடுமையாக எச்சரிக்கிறது.

“உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகாவது உங்களின் ஜனநாயக விரோத செயல்பாடுகளை நிறுத்திக் கொண்டு உங்கள் தவறுகளை சரி செய்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அன்றாட நடவடிக்கைகளில் தலையிடுவது, சட்டத்துக்குப் புறம்பாக தன்னிச்சையாக அதிகாரிகளை அழைத்து உத்தரவுகளைப் பிறப்பிப்பது போன்ற உங்களது செயல்பாடுகள் தொடருமேயானால் உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர வேண்டிய நிலை உருவாகும்” என்று கடுமையாக எச்சரிக்கிறது அந்தக் கடிதம். “உச்சநீதிமன்றத்தில் அரசியல் சாசன அமர்வே தீர்ப்பளித்துள்ளதால் இந்தத் தீர்ப்பு டெல்லி மாநில ஆட்சிக்கு மட்டுமல்ல, அனைத்து மாநிலங்களிலும் ஆளுநரின் அதிகாரங்களை வரையறுத்துள்ள தீர்ப்பாகும்” என்று வாதிடுகிறார், புதுவை முதல்வர் நாராயணசாமி.

தமிழக அரசுக்கோ இத்தகைய அரசியல்

**டெல்லி ‘ஆம் ஆத்மி’ ஆட்சிக்கும் புதுவை ஆட்சிக்கும் உள்ள துணிவு தமிழ்நாடு அரசுக்கு இல்லாமல் போனது ஏன்?**

நிகழ்வுகள் உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் குறித்து எல்லாம் அவர்கள் பார்வைக்குச் சென்றிருக்குமா என்பதுகூட தெரியவில்லை. இந்தியாவிலேயே ஊழல் நிறைந்த மாநிலம் தமிழ்நாடுதான் என்று அமித்ஷா பேசினால்கூட “அப்படி எல்லாம் அவர் பேசியிருக்க மாட்டார், அவர் இந்திப் பேச்சை தமிழில் மொழி பெயர்த்தவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமல் மொழி பெயர்த்திருப்பார்கள்” என்று விளக்கம் கூறும் பரிதாப நிலையில்தான் தமிழக அரசு அடிபணிந்து கிடக்கிறது.

ஆளுநர்கள் ஆளும் கட்சிகளின் பிரதிநிதிக ளாகவே செயல்படுவது ‘சுதந்திரம்’ பெற்ற காலத்திலேயே தொடங்கிவிட்டது. அப்போது மத்தியிலும் மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சிகளின் ஆட்சிகளே நடந்ததால் முரண்பாடுகளுக்கு வாய்ப்புகள் இல்லை; எனவே பிரச்சினைகள் எழவில்லை; அவ்வளவுதான்.

### ஆளுநர் பதவி குறித்து நடந்த விவாதங்கள்

ஆளுநர் பதவி குறித்து அரசியல் நிர்ணய சபையிலேயே கடும் விவாதங்கள் நடந்தன. அந்த விவாதங்களைப் படித்தால், மாநிலங்களைக் கண்காணிக்கக்கூடிய மத்திய அரசின் ஒற்றர்களாக செயல்படுவதற்கே ஆளுநர் பதவி உருவாக்கப்பட்டது என்ற முடிவுக்கு வந்து விடலாம். அரசியல் சட்ட உருவாக்கத்திற்கான நகல் வரைவுக் குழு ஆளுநர்கள் மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று தனது வரைவில் குறிப்பிட்டிருந்தது. இது குறித்து நடந்த விவாதத்தில் இந்த நடைமுறை இரண்டு முதலமைச்சர்களை உருவாக்குவதாகிவிடும் என்று கூறி இந்த முடிவு புறந்தள்ளப்பட்டது. கவர்னர் பதவிக்கான வேட்பாளர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரித்து சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று பட்டியலி லிருந்து ஒருவரை தேர்வு செய்ய குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம் என்பது இரண்டாவது ஆலோசனையாக முன் வைக்கப்பட்டது. இந்த முறையினால் மாநிலத்தில் ஆளும் கட்சியின் ஆதரவு பெற்றவர்தான் ஆளுநராக வர முடியும். பிறகு மாநில அரசும் ஆளுநரும் கைகோர்த்து செயல்படுவார்கள் என்பதால் இந்த ஆலோசனையும் புறந்தள்ளப் பட்டது. ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் பிரிந்து செல்லும் வாய்ப்புகள் உருவாகிவிடலாம் என்ற அச்சமும் அதைத்

4ஆம் பக்கம்

## அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜையா? கொளத்தூர் ஒன்றிய கழகம் எதிர்ப்பு

அரசு என்பது எந்த விதமான ஜாதி,மதம்,இன அடையாளங்களோடு இருக்கக் கூடாது. அரசு அலுவலகங்களில் எந்த மதக் கடவுளின் படங்களோ அதற்கு வழிபாடோ நடத்தப்படக் கூடாது என்பது அரசாணை. அந்த அரசாணையை நடைமுறைப்படுத்த வேண்டி 17.10.2018 காலை கொளத்தூர் ஒன்றிய அலுவலகம், கொளத்தூர் காவல்நிலையம், கண்ணாமூச்சி தொடக்க கூட்டுறவு வங்கி, கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் என அரசு அலுவலகங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கொளத்தூர் நகரச் செயலாளர் ராமமூர்த்தி, கொளத்தூர் ஒன்றிய செயலாளர் ஈஸ்வரன் மற்றும் விக்னேஷ் ஆகியோர் நேரில் சென்று அதற்கான அரசாணையை கொடுத்தனர். அரசு அதிகாரிகளும் நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் இதை மீறி 17.10.2018 மாலை கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆயுத பூஜை விழா கொண்டாடப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசு ஊழியரான காவலாண்டியூர் சசிகுமார் ஊராட்சி ஒன்றிய அலுவலக அதிகாரியிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். தோழர்கள் சென்று கேட்டதற்கு அது அவரவர் விருப்பம் , யார் வேண்டுமானாலும் எந்த படத்தை வேண்டுமானாலும் வைத்து வழிபடலாம் என்று ஆணையாளர் விளக்கம் அளித்துள்ளார்.

இதைக் கண்டித்து அக்டோபர் 29ஆம் தேதி இதற்கு எதிர்வினையாற்றும் போராட்டம் நடத்த கழகத் தோழர்கள் தயாராகி வருகிறார்கள்.

**தலையங்கம்**

## ‘மிடூ’ இயக்கத்தை ஆதரிப்போம்

நாங்களும்கூட’ (MeToo) இயக்கம் தீவிரமடைந்து வருகிறது. பாலியல் சீண்டல், பாலியல் துன்புறுத்தல், பாலியல் மிரட்டல்களுக்கு உள்ளான பெண்கள், இந்த இயக்கத்தின் வழியாக மனம் திறந்து பேசுகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தவை என்றாலும், துணிவோடு வெளியிடுவதற்கான பாதுகாப்பான சமூக சூழல் இப்போதுதான் வந்திருக்கிறது.

இதில் குற்றக் கூண்டில் நிறுத்தப்படுகிற தனி நபர்கள் யார் என்ற ஆராய்ச்சிக்கு இடமில்லை. பிரச்சினைகள்தான் முக்கியம் என்பதே நமது கருத்து. பெண்கள் ‘உல்லாசத்துக்கும் இன்ப நுகர்ச் சிக்குமான’வர்கள் என்ற கருத்தியலை சமூகத்தில் கட்டமைத்தது ஆண் ஆதிக்க சிந்தனை. அந்த ஆணாதிக்க சிந்தனையை உரமிட்டு வளர்த்தது. பொதுப் புத்தியில் திணித்து வைத்தது – மதங்களும், மதங்கள் கற்பித்த சடங்குகள் – பெண்கள் குறித்த பார்வைகள் தான்.

எந்த ஒரு ஆணும் தனது ‘பாலுறவு வக்கிரமங்களை’ பெருமையோடு பகிர்ந்து கொள்ள இந்த சமுதாயம் அனுமதிக்கிறது. அதற்காக எந்த ஆணும் வெட்கப்படுவது இல்லை. ஆனால் ஒரு பெண் அப்படி சமூகத்தில் பேசத் தொடங்கிவிட்டால் அவ்வளவுதான். சமூகம் அந்தப் பெண்ணை சமூகத்தின் அவமானமாகவே பார்க்கும். பொதுப் புத்தியில் படிந்து போய் நிற்கும் இந்த பார்வைகளை மீறி பெண் துணிவாக தனக்கிழைக்கப்பட்ட ‘பாலியல்’ துன்புறுத்தல்களை பேச வருகிறார் என்றால், அதற்கு உள்நோக்கம் கற்பிக்க முடியாது, விதி விலக்குகள் வேண்டுமானால் இருக்கலாம்.

இந்தப் பிரச்சினையை தமிழ்ப் பண்பாடும் இலக்கியங்களும் மதங்களும் பெண்கள் மீது மட்டும் ‘புனிதமாக’வும், ‘பண்பு ஒழுக்கமாக’வும் திணிக்கும் ‘கற்பு’ என்ற கருத்தியலின் அடிப்படையில் நாம் அணுகவில்லை; அதில் நமக்கு உடன்பாடும் இல்லை.

மாறாக ஒரு பெண்ணின் உடல் அவருக்கானது; அவரது உரிமைக்கும் கட்டுப்படுத்தலுக்கும் உரியது; அந்தப் பெண்ணின் உடல்சார்ந்த உரிமைகள் குறித்து முடிவெடுக்கும் முழு உரிமை கொண்டவர் அந்தப் பெண் தான். அந்தக் கண்ணோட்டத்தில் பெண்ணின் விருப்பம் மற்றும் உரிமைகளில் அத்துமீறி நுழையும் ஆண்களுக்கு எதிராக வெளிப்படும் பெண்ணின் குரலில் முழுமையான நியாயம் இருக்கிறது என்பதே நமது கருத்து. இப்படிப் பெண்கள் துணிவோடு வெளியே வருவது பெண்களைப் போகப் பொருளாகப் பயன்படுத்த நினைப்போருக்கு எதிர்கால எச்சரிக்கையாகவும் அமையும்.

இந்தப் பிரச்சினையில் மத்திய அமைச்சர் அக்பர் பதவி விலகியிருக்கிறார். தமிழ்நாட்டில் கவிஞர் வைரமுத்து, இயக்குநர் சு.சி. கணேசன் உள்ளிட்டவர்கள் மீது குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன. தமிழ்நாடு பிராமணர் சங்கத்தின் தலைவரான நாராயணன் மீது பாடகி சின்மயி இதேபோல் புகாரைக் கூறுகிறார். இந்தப் பட்டியலில் பல பார்ப்பன ‘இசை’ப் பிரமுகர்களும் இடம் பெற்றுள்ளனர். தமிழ்நாடு பிராமணர் சங்கத் தலைவர் நாராயணன், சின்மயியை தரக் குறைவான வார்த்தைகளால் அர்ச்சித்துள்ளார். தமிழ்நாடு பிராமண சங்கத்திலிருந்தே நாராயணன் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற எதிர்ப்புக் குரல் வெளிவரத் தொடங்கியுள்ளன. ‘தமிழ்நாடு பிராமண சங்க’த்தின் திண்டுக்கல் மாவட்டத் தலைவர் ஹரிஹர முத்து அதில் ஒருவர். ‘அந்தணர் முன்னேற்றக் கழகம்’ என்ற அமைப்பின் தலைவராக உள்ள ஜெயப்பிரகாஷ் என்பவரும் நாராயணனுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியுள்ளார்.

பா.ஜ.க. இணை அமைச்சரான பொன். இராதா கிருஷ்ணன், இப்படி பெண்கள் வெளிப்படையாகப் பேசுவது பண்பாட்டுச் சீரழிவு என்கிறார். ஆனால் பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தர்ராசன், பெண்கள் துணிவோடு பேசுவதை வரவேற்றிருக்கிறார். பார்ப்பன சங்கத்திலும் பா.ஜ.க.விலும் முரண்பட்ட குரல்கள் கேட்கின்றன.

அதே நேரத்தில் ஆண்கள் ஆதிக்க உணர்வு கொண்ட அத்தனை அரசியல் கட்சிகளும் இதில் ‘கள்ள மவுனம்’ சாதிக்கின்றன. ஆனாலும் நாம் உரத்துக் கூறுவோம்.

பெண்களே; துணிவுடன் வெளியே வாருங்கள்; பெண்களைப் போகப் பொருளாக நினைப்போரை அம்பலமாக்குங்கள்!

அந்தக் கருத்தியலை அவர்கள் மண்டைக்குள் திணித்து வைத்திருக்கும் – மதம், சடங்கு, சம்பிரதாயம், வழிபாடு, ஜாதிய நோய்களையும் அந்த எதிர்ப்புக் குரலோடு இணைத்துக் கொள்ளுங்கள்!

## முதலில் மனிதர்களாக வாழப் பழகுங்கள்

# வடகலை–தென்கலை அய்யங்கார்களுக்கு உயர்நீதிமன்றம் இடித்துரை

வைணவக் கோயிலான காஞ்சிபுரம் தேவ ராஜசாமி கோயிலில் தென்கலை அய்யங்கார் களுக்கும் வடகலை அய்யங்கார்களுக்கும் தொடர்ந்து மோதல் இருந்து வருகிறது. வடகலை அய்யங்கார் பார்ப்பனர்கள் ‘தமிழ் பிரபந்தங்களை’ பாடக் கூடாது என்கிறார்கள். தென்கலை அய்யங்கார்கள், ‘ஆச்சாரியா வேதாந்த தேசிகரின்’ தமிழ் பிரபந்தங்களைப் பாட வேண்டும் என்று கூறி வருகிறார்கள். தமிழ் பிரபந்தம் பாட அனுமதிக்கக் கோரி சுரேஷ் என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி மகாதேவன், தமிழ் பிரபந்தத்தைப் பாடலாம் என்று வாய்மொழி உத்தரவு பிறப்பித்து, வழக்கு விசாரணையை அக்.22ஆம் தேதி தள்ளி வைத்தார். இந்த நிலையில் சீனிவாசன் என்பவர் தமிழ் பிரபந்தத்தை ஒரு நாள் மட்டும் பாடாமல், தொடர்ந்து பாடுவதால் தடை விதிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ‘சரசுவதி பூஜை’ நாளன்று நீதிமன்றம் விடுமுறை. மனுவை அவசரமாக விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் கோரியதால் வழக்கு, நீதிபதி வைத்தியநாதன் வீட்டிலேயே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதாரர் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் மீனாள், “செப்டம்பர் 21ஆம் தேதி ஒரு நாள் மட்டுமே தமிழில் பாட நீதிமன்றம் அனுமதி வழங்கியது. ஆனால் அதற்குப் பிறகும், தமிழில் பாடுகிறார்கள்; எனவே தடை விதிக்க வேண்டும்” என்று வாதிட்டார்.

அறநிலையத் துறையின் சார்பில் வாதாடிய சிறப்பு வழக்கறிஞர் மகாராஜா, “வடகலை-தென்கலை பிரிவினருக்கிடையே தகராறு உள்ளது; பிரதான வழக்கு அக்.22இல் விசாரணைக்கு வருகிறது” என்றார். நீதிபதி வைத்தியநாதன் தனது உத்தரவில் நீதிபதி மகாதேவன் முன் விசாரணையில் உள்ள இந்த வழக்கில், மறு உத்தரவு வரும் வரை தமிழ் பிரபந்தம் பாட தடை விதிக்கப்படுகிறது” என்று அறிவித்தார். அப்போது நீதிபதி, “கோயில் என்பது அனைவரின் வழிபாட்டுக்கும் பொதுவான இடம். துரதிருஷ்டவசமாக வடகலை அய்யங்கார்களும் தென்கலை அய்யங்கார்களும் பிரச்னை செய்து வருகிறார்கள். இன்னும் பிரச்னை தீர்ந்தபாடில்லை. இந்த பிரபஞ்சத்தில் பூமி இருக்கும் வரை இந்த கருத்து வேறுபாடுகளுக்கு தீர்வே கிடைக்கப் போவதே இல்லை. தங்களை மனிதர்கள் என்று கூறிக் கொள்கிறவர்கள் முதலில் ஒரு மனிதனாக இருப்பதற்கான முக்கியத்து வத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்” என்று நீதிபதி தனது இடைக்கால உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

# 61 பேரை பலி கொண்ட ‘இராவணன் எரிப்பு’

## தசரா நடத்தியவர்களை கைது செய்: பொது மக்கள் போராட்டம்

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் அருகே ஜோதா பதக் என்ற இடத்தில் ‘இராவணனை’ எரிக்கும் தசரா விழா கொண்டாட்டத்தின்போது இரயில் தண்டவாளத்தில் நின்று விழாவை வேடிக்கைப் பார்த்தவர்கள் மீது இரயில் மோதி 61 பேர் பலியாகி விட்டார்கள். விழாவில் பட்டாசு வெடிப்பு சத்தத்தில் இரயில் வந்த சத்தம் கேட்கவில்லை என்று கூறப்படுகிறது. இப்போது ‘தசரா விழா’ கொண்டாட்டத்தை நடத்திய ஏற்பாட்டாளர்களைக் கைது செய்ய வேண்டும் என்று உள்ளூர் மக்கள் ஆவேசமாகப் போராடி வருகிறார்கள். தொடர்வண்டி ஓட்டுனரையும் கைது செய்ய வேண்டும் என்பது மக்கள் கோரிக்கை. போராட்டக்காரர்களைக் கலைக்க போலீஸ் படை வந்தபோது போலீசார் மீது மக்கள் கல் வீசி தாக்குதல்களை நடத்தினர். 61 பேரை சாகடித்த இந்த கொண்டாட்டத்தில் தொடர்வண்டி காவல்துறை எவருடைய பெயரையும் குறிப்பிடாமல் முதல் தகவல் அறிக்கையை தயார் செய்துள்ளது.


விழாவுக்கு ஏற்பாடு செய்தவர்கள் உள்ளூர் காங்கிரஸ்காரர்கள். மாநகராட்சி கவுன்சிலராக இருக்கும் விஜய் மதன் அவரது மகன் சவுராப் மதன் மித்து ஆகியோர் ஏற்பாடு செய்த இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக, பங்கேற்றவர் அமைச்சராக இருக்கும் நவ்ஜோத் சிங்கின் மனைவி டாக்டர் நவ்ஜோத் கவுர். அவர் விழாவுக்கு தாமதமாக வந்தது விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. அதன் காரணமாக விரைவு இரயில் வரும் நேரத்தில் விழா தொடங்கப்பட்டதாக மக்கள் கூறுகிறார்கள்.

தொடர்வண்டி நிலையம் அருகே விழா நடத்த அனுமதி இல்லாத பகுதியில் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ‘இராவணன் எரிப்பு’க் காட்சிகள், ‘எல்.சி.டி./எல்.ஈ.டி.’ திரைகளில் ஒளிபரப்பப்பட்டன. அந்தத் திரைகள் தண்டவாளம் அருகே அமைக்கப்பட்டிருந்தது ஏன்? என்று பொது மக்கள் கேள்வி கேட்கிறார்கள். “தொடர்வண்டி ஓட்டி வந்தவர் நினைத்திருந்தால் வேகத்தைக் குறைத்துக் காப்பாற்றியிருக்க முடியும். பார்வையாளர்கள் தொடர் வண்டி மீது கல் வீசியதால் நிறத்த முடியவில்லை என்று ஓட்டுனர்கள் கூறுவது உண்மையல்ல” என்று பொது மக்கள் கூறுகிறார்கள். இந்த விபத்தில் இராமாயண தசரா கூத்தில் ‘இராவணன்’ வேடம் போட்டவரும் பலியாகிவிட்டார்.

மதவெறியை ஊட்ட நடத்தப்படும் விழாக்களில் சட்டங்கள், விதிகள் ஏதும் மதிக்கப்படுவதில்லை, தங்குதடையற்ற கட்டுப்பாடற்ற முறையில் ‘பக்தி’, ‘மத சுதந்திரம்’ என்று கூறிக்கொண்டு பண்டிகைகள் கொண்டாட்டங்கள் நடக்கின்றன. மதவெறியூட்டப்பட்ட மக்கள் உயிர்ப் பாதுகாப்புப் பற்றியும் கவலை கொள்வதுஇல்லை என்பதையே இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

# கழகத் தலைவர் பங்கேற்றார்

## இந்திய தேசிய லீக்-கின் பெரியார் கருத்தரங்கம்




03.10.2018 அன்று மாலை 4.30 மணியளவில் செங்குன்றம் மார்கெட், முசாபர் பங்களா பகுதியில் பெரியார் கருத்தரங்கம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பேராசிரியர் சுந்தரவள்ளி, பெரியார் சரவணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

முன்னுரை வழங்கிய இந்திய தேசிய லீக் கட்சியின் மாநில துணைத் தலைவர் வழக்கறிஞர் அலீம் அல்புகாரி, “பெரியார் அவர்களோடு இசுலாமிய சமுதாய தலைவர்களும் மக்களும் முன்பு மிகவும் இணக்கமாக பயணித்ததை குறிப்பிட்டு தற்போது இசுலாமிய சமுதாயம் பெரியாரிடம் இருந்து சற்று விலகி இருப்பதை சுட்டிக்காட்டி, கடவுள் மறுப்பை மட்டுமே காரணம் காட்டி பெரியாரிடம் இருந்து இசுலாமிய சமுதாயம் தள்ளி இருக்கவேண்டியதில்லை பெரியாரிடம் கற்றுக்கொள்ளவும், பின்பற்றவும் தங்கள் சமுதாயத்திற்கு நிறைய இருக்கிறது” என்று குறிப்பிட்டார். “இன்றைய காலகட்டத்திற்கு பெரியாரின் மிக அவசியத் தேவையை தங்கள் இசுலாமிய சமுதாய மக்களுக்கு எடுத்துச்சொல்லவே இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்ததாகவும்” தோழர் அலீம் அல்புகாரி குறிப்பிட்டார்.

## திருச்செங்கோடு கருத்தரங்கில் கொளத்தூர் மணி பேச்சு (3)

# ‘திராவிட கூட்டாட்சி’ : அண்ணா கூறியதையே அம்பேத்கரும் கூறினார்

*திராவிட நாடு ஒரே நாடாக இருக்க வேண்டும் என்று அண்ணா கூறவில்லை; பிரிந்து செல்லும் உரிமையோடு கூடிய கூட்டாட்சியை பேசினார். அம்பேத்கரும் இதே கருத்தைத்தான் கூறினார் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுட்டிக் காட்டினார்.*

*“கருஞ்சட்டைக் கலைஞர்” என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு உருவான பிறகுதான் வங்காளத்தில் இந்தி எதிர்ப்பு பேசப்பட்டது. மராட்டியத்தில் பேசப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் ஒற்றுமையில் ஒரே இந்தியா பேசிய பல தலைவர்கள் இந்தியை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள்.

அம்பேத்கர் கூட இதைத்தான் பேசியிருக்கிறார். தென்னிந்தியாவும், வட இந்தியாவும் வேறு என்று அம்பேத்கர் பேசுகிறார். ஆரம்பத்தில் அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது ஒன்றுபட்ட இந்தியாவைப் பற்றி அவர் பேசியிருக்கலாம். அந்த அரசியல் சட்டம் அவர் மட்டுமே எழுதியதல்ல. எல்லோரும் இணைந்து எழுதியது. அதை சட்ட சொற்களால் வரைந்தவர் மட்டும்தான் அம்பேத்கர். சில கருத்து மாற்றங்களை அவரால் செய்திருக்க முடியும், அவ்வளவுதான். அதற்குமேல் எதுவும் பெரிதாக செய்திருக்க முடியாது. ஆனால் 1955ஆம் ஆண்டில் மொழிவழி மாநிலங்களைப் பற்றி அவர் எழுதுகிறபோது தென்னிந்தியாவும், வட இந்தியாவும் சேர்ந்தே இருக்க முடியாது என்றுதான் சொன்னார். எப்படி சேர்ந்திருக்க முடியும் என்ற கேள்வியையும் அவர் முன்வைத்தார்.

தென்னிந்தியாவுக்கும், வட இந்தியாவுக்கும் உள்ள வேறுபாடுகளை அவர் சொன்னார். 1.தென்னிந்தியர்கள் கல்வியில் முன்னேறியவர்கள். வட இந்தியர்கள் கல்வியில் பின்தங்கியவர்கள். 2 .வட இந்தியர்கள் பிற்போக்கான சிந்தனையாளர்கள், மூட நம்பிக்கையாளர்கள். ஆனால் தென்னிந்தியர்கள் பகுத்தறிவுவாதிகள். 3. வட இந்தியர்களின் பண்பாடு பழங்காலப் பண்பாடு. ஆனால் தென்னிந்தியர்கள் புதுமையை விரும்புபவர்கள். எனவே எப்படி இரண்டு பேரும் சேர்ந்திருக்க முடியும் என்று அம்பேத்கர் கேட்டார். அதற்கு தீர்வையும் அவரே சொன்னார்.

அதில் ஒரு தீர்வாக இந்தியைத் திணிக்காதீர்கள் என்று சொன்னார். இந்தி ஆட்சிமொழி என்று அரசியல் சட்டத்தில் எழுதியவரும் அவர்தான். 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியைத் திணிக்காதீர்கள் என்று பேசியவரும் அவர்தான். இந்திக்காரர்களே நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒரு ஓட்டு வித்தியாசத்தில்தான் உங்கள் இந்தி ஆட்சிமொழியானது என்றும் சொன்னார். அரசியல் நிர்ணய சபையானாலும் சரி அல்லது ஆட்சிமொழிக் குழுவிலானாலும் சரி ஒரு ஒரே வாக்கில்தான் இந்தி வெற்றிபெற்றது. ஒரு ஓட்டில் வெற்றி பெற்ற நீங்கள் பெரும் வெற்றிடையந்ததாகக் கருதினீர்களேயானால் இந்தியாவை உடைப்பதற்கு நீங்கள் காரணமாக இருப்பீர்கள் என்று எழுதினார்.

அடுத்து, ராஜாஜியுடன் நடந்த விவாதத்தைக் குறிப்பிட்டு மற்றொன்றையும் எழுதினார். “இந்தியா முழுவதும் ஒரே ஒன்றியமாக இருக்க முடியாது. தென்னிந்திய



மாநிலங்களின் ஒன்றியம் என்று ஒன்று அமைக்கப்பட வேண்டும். வட இந்திய மாநிலங்களின் ஒன்றியம் என்று ஒன்று அமைக்கப்பட வேண்டும். தென்னிந்திய மாநிலங்கள் சேர்ந்து ஒரு கூட்டமைப்பாகவும் (Federation of Southern States), வட இந்திய மாநிலங்கள் சேர்ந்து கூட்டமைப்பாகவும் (Federation of Northern States) அமைத்து, இரண்டையும் சேர்த்து சம வாக்குரிமை அளித்து இந்திய பெருங் கூட்டமைப்பை (Confederation of India) உருவாக்க வேண்டும்” என்றார் அம்பேத்கர்.

இதை 1955ஆம் ஆண்டு டிசம்பரில் எழுதினார். 1956ஆம் ஆண்டில்தான் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டது. தென்னிந்தியர்கள் மக்கள் தொகையில் குறைவாக இருக்கிறார்கள். வட இந்தியர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதனால் இரண்டு பேருக்கும் சம வாக்குரிமை அளித்து இந்திய ஒன்றியத்தை அமைக்க வேண்டும் என்றார். ஆனால் இந்திய ஒன்றியம் அவ்வாறு அமைக்கப்படவில்லை. தென்னிந்திய மாநிலங்களுக்கு 120 இடங்கள்தான் இருக்கிறது. 534 இடங்களில் மீதம் இருக்கிற எல்லா இடங்களும் வட இந்திய மாநிலங்களுக்குத்தான் இருக்கிறது. நாடாளுமன்றம் அப்படியிருக்கக் கூடாது என்றார் அம்பேத்கர்.

அவர் சொன்ன Federation of Southern States என்பதைத்தான் அண்ணா அவர்கள் திராவிட நாடு என்று குறிப்பிட்டார். மொழிவழி பிரிந்து நிற்போம், இனவழி கூடியிருக்கிற, பிரிந்து செல்லும் உரிமையோடு கூடிய, சமதர்மக் கூட்டரசாக திராவிடக் கூட்டரசு இருக்கும் என்றார் அண்ணா. ஒரே நாடாக இருக்க வேண்டுமென்று அண்ணா கூறவில்லை. இதையேத்தான் அம்பேத்கரும் சொன்னார். அம்பேத்கர் சொன்னதற்கு எதுவும் பேசாதவர்கள் அண்ணா சொன்னதற்கு மட்டும் குறுக்குசால் ஓட்டினார்கள். தெலுங்கர்கள், கன்னடர்கள் ஆட்சிக்கு வந்ததற்கு இவர்கள்தான் காரணம் என்று இப்போதும்கூட சொல்லுகிறார்கள். அவர்கள் அரசியல் புரிதலற்றவர்களாக இதைச் சொல்லுகிறார்கள்.

கலைஞரைப் பற்றி சொல்லும்போது, கருஞ்சட்டை என்பதைப்பற்றி சிலவற்றை சொல்லிவிட்டு நான் அடுத்ததற்கு போக வேண்டுமென்று விரும்புகிறேன். அண்ணா படைத்த இலக்கியங்களில் நாம் பேசாதது பல இருக்கிறது. இப்போது அரசியலைப் பற்றி, உலகமயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதைப் போல இந்திய மயத்தைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம்.

நம் தோழர்கள் உட்பட அனைவருக்கும் நான் பரிந்துரைப்பதும், கேட்டுக்கொள்வதும் அண்ணாவின் ‘பணத்தோட்டம்’ என்ற நூலை நாம் படிக்க வேண்டும். அதற்கானத் தேவை இருக்கிறது. இப்பொழுது கூட தன்னாட்சி தமிழகம் என்ற அமைப்பு அந்த நூலை திரும்பவும் அச்சிட்டிருக்கிறார்கள். திராவிடர் கழகமும் அந்த நூலை வெளியிட்டிருக்கிறது. அந்த நூலில் இந்தியாவின் அரசியலை அண்ணா விளக்குகிற பாங்கு இன்றளவுக்கும் பொருத்தமாக இருக்கிறது என்பதைப் படித்தால் தெரியும். வங்கியின் பெயரால் வடவர்களால் சுரண்டப்படுகிற பணம், அரசின் பேரால் சுரண்டப்படுகிற பணம், சுரண்டப்படுகிற தமிழகத்தின் கனிம வளம் என எல்லாவற்றைப் பற்றியும் விவாதிக்கிற ஒரு நூல். இது பொருளாதார ரீதியாக விவாதிக்கிற நூல். பண்பு ரீதியாகத் தெரிந்துகொள்ள ’ஆரிய மாயை’ அவரிடமிருந்து நாம் படிக்க வேண்டிய நூலாகும்.

ஆரிய மாயை என்பதை அவர் தொடங்குகிறபோதே சொல்லுவார். 150 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சு நாட்டிலிருந்து ஒருவர் இங்கு வருகிறார். அவர் இந்த நாட்டுச் சூழலைப் பார்க்கிறார். இங்குள்ள சூழலைப் பார்த்த அவர், இந்த நாட்டில் இந்த மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று கண்டு அதிர்ச்சியடைகிறார். ஒரு கூட்டம் இங்கு இருக்கிறது. அந்தக் கூட்டம் எந்த உற்பத்தித் தொழிலிலும் ஈடுபடாமல், உற்பத்தியில் ஈடுபட்ட மக்கள் சம்பாதிக்கிற பணத்தை தங்களுடையதாக ஆக்கிக்கொண்டது மட்டுமில்லை மேலாண்மையையும், ஆதிக்கத்தையும் வைத்திருக்கிற கூட்டமாக அவர்களே இருக்கிறார்கள் என்றார். பார்ப்பனர்களை அவர் பார்த்ததைத்தான் இவ்வாறு கூறுகிறார். அதற்கான சரியான ஆங்கில வார்த்தைகளைச் சொல்லி விளக்கியிருப்பார். அதை அண்ணா மொழிபெயர்த்து இருப்பார்.

பேராசைப் பெருந்தகையே போற்றி
பேச நா இரண்டுடையாய் போற்றி
வஞ்சக வேந்தே போற்றி

என்றெல்லாம் அந்த நூலிலுள்ள ஆங்கில சொற்களை மொழிபெயர்த்து தமிழில் எழுதியிருப்பார்.

அண்மையில் கூட தொலைக்காட்சிகளில் பார்த்தோம். காந்தியை ஜின்னா இந்து தலைவர் என்று சொன்னார் என ஒரு விவாத நிகழ்ச்சியில் ஒருவர் சொன்னார். ஆனால் அப்போதே நான் சொல்லவே இல்லை என்பார். இப்போதுதான் சொன்னாய் என்றால் நான் சொல்லவே இல்லை என்பார். அதுதான் ‘பேச நா இரண்டுடையாய் போற்றி’.

(தொடரும்)

தொகுப்பு: ர.பிரகாசு

## தலைமைக் கழகத்தில் ‘நிமிர்வோம்’ 7ஆவது வாசகர் வட்டம்

‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தின் 7 ஆவது சந்திப்பு தலைமை அலுவலகத்தில் 21.10.2018 மாலை 6 மணிக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வை எட்வின் பிரபாகரன் ஒருங்கிணைத்தார்.

கடந்த மார்ச், ஏப்ரல் மாத இதழ்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. பாஸ்கர் ‘டார்வினின் பரிணாமக் கோட்பாடு’ என்ற தலைப்பிலும், செந்தில்குமார் (FDL) ‘ஆர்.எஸ்.எஸ். பிடியில் அம்பேத்கர் பல்கலைக் கழகம்’ என்ற தலைப்பிலும், ஜெயபிரகாஷ் ‘தமிழ் சினிமாவில் சாதிய ஊடுறுவல்கள்’ என்ற தலைப்பிலும் தங்களது பார்வையையும், கருத்துகளையும் சிறப்பாக எடுத்துரைத்தனர். இமானுவேல் துரை ‘நிமிர்வோம் இதழைக் குறித்தும் அதன் தேவையை குறித்தும்’ பேசினார்.

இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இதழ்களைக் குறித்து தோழர்களின் கருத்துகளுக்கும், வெளியிடப்படும் கட்டுரைகளின் நோக்கத்தைக் குறித்தும் சிறப்பாக கருத்துரையாற்றி கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற “சேரடி சாய்பாபாவின் பின்னணி என்ன?” என்ற கட்டுரையைக் விளக்கியும் உரையாற்றினார். வாசகர் வட்டத்தில் மே 17 இயக்கத்தைச் சார்ந்த தோழர்கள், கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# போலி சுவரொட்டிகளுக்குக் கழகம் மறுப்பு

திராவிடர் விடுதலைக் கழகம் வெளியிட்டதாக சில சமூக விரோத சக்திகள் போலியாக ஒரு சுவ ரொட்டியை முகநூலில் வடிவமைப்பு செய்து வெளியிட்டு, அதைக் காரணமாக வைத்து கழகத் தோழர்களை அலைப்பேசி வழியாக ஆபாசமாக பேசி வருகின்றனர். இதற்கு கழக சார்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. மறுப்பு விவரம்:

இங்கு பதிவிடப்பட்டுள்ள சுவரொட்டி படங்கள் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சுவரொட்டிகள் அல்ல. திவிக-விற்கு களங்கம் கற்பிக்கும் நோக்கோடு சமூக வலைத் தளங்களில் சமூக விரோதி களால் போலியாக தயாரிக்கப்பட்டு இது பரப்பப்பட்டுள்ளது. மயிலாடு துறை,சென்னை ஆகிய ஊர்களின் பெயரில் இந்த போலி சுவரொட்டிகள் இணையதளங்களில் பரப்பப்படுவதாக அறிகிறோம்.

எமது இயக்கத்தை கருத்தியலாய் சந்திக்க இயலாத காவிகளும், இந்துத்துவவாதிகளும் வழக்கமாக காவிகளின் கீழ்த்தரமான பிரச்சார பாணியில் பரப்பி தங்கள் சுய அரிப்பை சொறிந்து கொள்கிறார்கள். திவிக விற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் உள்நோக்கோடு இவ்வாறு அவதூறு பரப்பும் சமூக விரோதிகள் மீது சட்டப்படி கழகத்தின் சார்பில் காவல்துறையிடம் புகார் அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக 19.10.2018 அன்று காலை கழக வழக்கறிஞரும் நாகை மாவட்ட பொறுப்பாளருமான இளையராஜா, கழகப் பொறுப் பாளர்கள் மகேஷ், செந்தில் குமார், நடராஜ், தில்லை நாதன், விஜயராகவன், நாஞ்சில் சங்கர் ஆகியோர் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்கள். மாவட்ட காவல்துறை காண்காணிப்பாளரிட மும் புகார் அளிக்க உள்ளனர். சென்னை மாவட்டக் கழகச் சார்பில் 22.10.2018 அன்று காவல்துறை ஆணையர் அலுவலகத்திலும் கழகப் பொறுப்பாளர் வோழவேந்தன், அய்யனார், செந்தில், எப்.டி.எல்., மற்றும் மயிலைப் பகுதித் தோழர்கள் மனு கொடுத்துள்ளனர்.

இந்த போலி சுவரொட்டிகளை பரப்புபவர்கள் மீதும் சட்ட நட வடிக்கை எடுக்க கழக வழக்கறிஞர்கள் ஆவண செய்து வருகிறார்கள்.

ஏற்கனவே இதுபோலவே இராம ரதயாத்திரை என்று இந்துத்துவ வாதிகள் பயணம் மேற்கொண்ட போது அவர்களை அம்பலப்படுத்தி மயிலாடுதுறையில் கழகத் தோழர்கள் போராட்டம் நடத்தினர். அப்போது அந்த போராட்டத்தில் கலந்து கொண்ட கழகத் தோழர் நாஞ்சில் சங்கர் இரண்டாம் நாளே இறந்துவிட்டதாக போலியாக படம் தயாரித்து மிக இழிவான பொய் பிரச்சாரத்தை அப்போதும் செய்தனர் காவிகள். (படம் இணைப்பு)

தன் வீட்டில் தாங்களே பெட்ரோல் குண்டுகளை ஏதோ ஒரு சுயநலக் காரணங்களுக்காக வீசிவிட்டு வேறொருவர் வீசியதாக நாடகமாடி கலவரத்தை உண்டாக்க முயல்வது, முகநூலில் பதிவிட்டுவிட்டு அட்மின் பதிவு செய்தார் என கோழைத்தனமாக பொய் பேசி தப்பித்துக் கொள்வது, நீதி மன்றத்தை இழிவாகப் பேசிவிட்டு அது எடிட் செய்யப்பட்டது என பொய் சொல்லுவது என்று எந்த விதமான நேர்மையும் உண்மையும் துளியும் இன்றி பேச்சிலும்,செயலிலும் மிக மிக மோசடித்தனமாக நடந்து கொள்வது தான் இந்த இந்துத்துவவாதிகளின் தொடர்ந்த செயலாக இருக்கிறது. இப்போது கழகத்தின் பெயரில் போலி சுவரொட்டி வடிவமைப்புகளையும் பரப்புவதும் இவர்களின் நேர்மையற்ற கீழ்த்தரமான பொய் பிரச்சாரங்களில் ஒன்று.

பண்டிகைகள் என்ற பெயரால், இன இழிவை நம் மீது சுமத்துவதையும், பார்ப்பனர்கள் கற்பனைகளாக சொல்லும் இந்து மத புராண இதிகாசங் களில் உள்ள அறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களையும், ஆபாச செய்திகளையும் பற்றி, இவ் வுண்மைகளை அறியாமல் பின்பற்றும் நம் மக்களிடம் அவர்கள் சொல்லும் சொற்களிலேயே பரப்புரை செய்யும் பெரியாரின் பாதையில்தான் திராவிடர் விடுதலைக் கழகம் திராவிடர்களை இழிவுபடுத்தும் ஆரியர்களின் புரட்டுக்களை மக்கள் மன்றத்தின் முன்னால் பரப்பும் பணியை மேற் கொண்டு வருகிறதேயன்றி போலிகள் தயாரித்துள்ள சுவரொட்டிகளில் உள்ளவை போன்ற அநாகரிக வார்த்தைகளால் அல்ல.

தீபாவளி ஆரிய - திராவிட முரணைச் சொல்லும் ஒரு பார்ப்பன இந்து மத கற்பனைக் கதை என்பதும், அவற்றின் வழியே திராவிடர்களை இழிவு படுத்தும் ஆரிய சூழ்ச்சியை அம்பலப்படுத்தவே நரகாசுர வதம் எனும் கதையின் உண்மை உள் நோக்கத்தை பரப்புரை செய்கிறோம்.

பட்டாசு வெடிப்பது சுற்றுச் சூழலை மிகவும் மாசுபடுத்துவதும், பட்டாசு சத்தம் ஒலிமாசு (sound pollution) ஏற்படுத்தி வயதானவர்கள், நோயாளிகள், குழந்தைகள் மட்டுமல்ல விலங்குகள், பறவைகள் ஆகியவற்றிற்கும் பெரும் பாதிப்பை உருவாக்குவதும், பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலைகளால் ஏற்படும் நில, நீர் மாசு, குழந்தை தொழிலாளர்கள் அனுபவிக்கும் கொடூரங்கள், விபத்துக்கள் ஆகியவை குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்களும், தொழி லாளர், குழந்தைத் தொழிலாளர்களின் உரிமைக்குப் போராடுவோரும், அரசும் கொடுக்கும் ஆய்வறிக்கை களின் அடிப்படையிலேயே பட்டாசு வெடிப்பதை தவிர்க்கும்படி நாமும் கூறுகிறோம்.

இந்து மத பண்டிகைகளுக்கு மட்டுமல்ல எந்த நிகழ்விற்கும் பட்டாசு வெடிப்பது தவிர்க்க வேண்டிய செயல் என்பதே நமது பரப்புரை .

அற்பச் செயலில் ஈடுபடும் சமூக விரோதிகள் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

(குறிப்பு : நீதிமன்றம் பற்றி அவதூறு பேசிய பார்ப்பனர் எச். ராஜா நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டுள்ளார்)

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பதற்கான வலிமையான சட்டப் பிரிவுகளை உருவாக்கிட வேண்டும் என்ற துடிப்புமே அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் தலைவர்களின் உளவியலாக இருந்தது. அந்த உணர்வுகளே அரசியல் சட்ட உருவாக்கத்துக்கு அடிநாதமாக இருந்தன. மாநிலத்து மக்களுக்கு நெருக்கமான ஒருவரை ஆளுநராக வரவிடக் கூடாது என்பதில் நேரு மிகவும் உறுதியாக இருந்தார். ஆளுநர் அந்த மாநிலத்துக்கு தொடர் பில்லாதவர்களாக வேறு மாநிலங்களி லிருந்து நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நேரு வலியுறுத்தினார். 1949 மே 31 அன்று நிர்ணய சபையில் நேரு இவ்வாறு கூறினார்.

“ஆளுநர்கள் மாநில மக்களால் தேர்ந் தெடுக்கப்படுபவர்களாக இருந்தால் மாகாணப் பிரிவினை உணர்ச்சிகளையும், குறுகிய மாகாண உணர்வுகளையும் (Narrow provincial way of thinking) ஊக்கப்படுத்திவிடும்” என்றார்.

மற்றொரு உறுப்பினரான பி.எஸ். தேஷ்முக் வெளிப்படையாகவே கேட்டார்:

“முதல்வரும், ஆளுநரும் எல்லா பிரச்சினையிலும் ஒன்றுபட்டு நின்று, மத்திய அரசை எதிர்ப்பதிலும் அவர்கள் ஒன்றுபட்டு நின்றால், பிறகு என்ன செய்ய முடியும்? மத்திய அரசின் ஆணைகளையும் கட்டளைகளையும் மாநில அரசு செயல்படுத்த மறுத்தால் என்ன செய்வது? மத்திய அரசு மாநில அரசு மீது படை எடுத்துச் செல்லுமா?” என்று கேட்டார். இறுதியாக ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவராகவே இருப்பார் என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதற்கான திருத்தத்தை இறுதியாகக் கொண்டு வந்தவர் பிரஜேஸ்வர் பிரசாத். “மத்திய அரசின் அதிகாரம் அனைத்து மாகாணங்களிலும் நிலை நாட்டப் பட்டாக வேண்டும். இது அவசியமானது” என்பது தீர்மானத்துக்கு அவர் கூறிய காரணம்.

பிரிட்டிஷ் இந்தியாவில் 1935ஆம் ஆண்டு இந்தியர்களுக்காக உருவாக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ‘மாகாண ஆட்சி’களைக் கண்காணிக்க ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு தங்கு தடையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இந்தியாவின் ‘சுதந்திரத்துக்கு’ப் பிறகும் அறுக்க முடியாத அடிமைச் சங்கிலியாக ஆளுநர் பதவி தொடருகிறது. ஆளுநருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைக் குறைத்து அமைச்சரவையின் ஆலோசனைப்படி செயல்பட வேண்டும் என்று சட்டம் அவர் களுக்கான அதிகாரங்களைக் கட்டுப்படுத்தினாலும் ஆளுநர்கள் தங்கள் ‘உசிதம்போல்’ செயல்படக் கூடிய அதிகாரங்களை (Discretionary Powers) சட்டம் வழங்கியிருக்கிறது. அந்த அதிகாரங்கள் எவை என்ற வரையறைகளும் சட்டத்தில் தெளி வாக்கப்படவில்லை. இப்போது ‘உசிதம்போல்’ என்பது தான் சார்ந்துள்ள கட்சித் தலைமையின் ‘உசிதம்போல்’ செயல்படுதல் என்ற நிலைக்கு வந்து விட்டது.

ஆளுநர் மாளிகை ஆடம்பரங்களில் வீண் செலவுகளில் கொழுத்துப் போய் கிடக்கின்றன. நேருவின் சகோதரியாகிய விஜயலட்சுமி பண்டிட், மகாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராக சிறிது காலம் பணியாற்றி, பிறகு பதவியைத் துறந்தார். “ஆளுநர் பதவிக்குக் கிடைக்கிற அதிக ஊதியமும், வசதிகளுமே ஒருவரை அப்பதவிக்குத் தூண்டுகின்றன. ஆளுநர் பதவி பயனற்றது. அரசமைப்புச் சட்டத்திலிருந்தே ஆளுநர் பதவியை அகற்றி விடவேண்டும்” என்று பதவி விலகியதற்குப் பிறகு அவர் துணிந்து கூறினார்.

‘ஆட்டுக்குத் தாடி தேவை இல்லை; அதுபோல் ஆளுநர் பதவியும் நாட்டுக்குத் தேவை இல்லை’ என்பதே தொடக்கக்கால தி.மு.க.வின் கொள்கையாகவும் இருந்தது.

## காவலாண்டியூரில் பெரியார் பிறந்த நாள் விழா

17.09.2018 அன்று காலை 9 மணிக்கு 20 இரு சக்கரவாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனத்தில் கொள்கை பாடல்களை ஒலிக்கச் செய்து ஊர்வலமாகச் சென்று குருவ ரெட்டியூர் பகுதியிலுள்ள பெரியாரின் முழு உருவ வெண்கல சிலைக்கு தி.க மற்றும் காவலாண்டியூர் பகுதி தி.வி.க. தோழர்கள் இணைந்து மாலை அணிவிக்கப்பட்டது. அங்கு கேக் வெட்டி பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. பிறகு காலை சிற்றுண்டி குருவைப் பகுதித் தோழர்கள் ஏற்பாடு செய்தனர். காவலாண்டியூர் பகுதி தோழர்கள் சுமார் 50 பேர் ஊர்வலமாகச் சென்று மிளகாய் பொதை, கண்ணாமூச்சி, பாலமலை பிரிவு, செ.செ. காட்டுவளவு , செட்டியூர், மூலக்கடை பகுதிகளில் உள்ள அரசினர் தொடக்க, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

பெரியாரைப் பற்றி காவை ஈஸ்வரன் உரையாற்றினார். பிறகு அனைத்து ஆசிரியர்களுக்கும் நிமிர்வோம் மற்றும் கழக வெளியீடுகள் அடங்கிய தொகுப்புகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கண்ணாமூச்சி, செ.செ. காட்டுவளவு, காவலாண்டியூர், செட்டியூர், காந்திநகர், மூலக் கடை, பகுதிகளில் கழகக் கொடிகள் ஏற்றபட்டன. அனைத்துப் பொது மக்களுக்கும் இனிப்பு மற்றும் துண்டறிக்கை வழங்கப்பட்டது. மாலை 4.30 மணிக்கு தோழர்கள் அனைவரும் மேட்டூர் பகுதியில் நடைபெற்ற கருஞ்சட்டை பேரணியில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு காவை ஈஸ்வரன். வசூல் ஒருங்கிணைப்பு சந்தோஷ்.

## மா.செங்குட்டுவன் துணைவியார் மறைவு



திராவிடர் இயக்க எழுத்தாளர் கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன் இணையர் செ.தாமரைச் செல்வி 17.10.2018 மாலை முடிவெய்தினார். இராயப்பேட்டையில் அமைந்துள்ள அம்மையாரின் இல்லத்திற்கு 18.09.2018 கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தென்சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் இல்லம் சென்று இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th October 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN